சென்னை மாநகராட்சியின் அனுமதியோடு வைக்கப்பட்டிருப்பதாகக் கூறினார்கள். அப்படி வைக்கப்பட்டிருக்கின்ற விளம்பரப் பலகைகள் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட அளவிலே வைக்கப்பட்டுள்ளனவா என்பதை ஒரு குழுவின் மூலம் அமைச்சர் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன், சமீபத்தில் இந்திய தணிக்கைத் துறை அதிகாரி அவர்கள் தன்னுடைய அறிக்கையிலே இரயில்வே லைனில் வைக்கப்பட்டிருக்கும் 173 விளம்பர போர்டுகளுக்கு கடந்த 4 ஆண்டு காலமாக வரி வசூலிக்கப்படாததால் சென்னை மாநகராட்சிக்கு ரூபாய் 50 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொகை நிலுவையில் உள்ளதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இதுகுறித்து சென்னை மாநகராட்சி எடுத்திருக்கின்ற நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திற்கு அறிவிக்க முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. சி. துரைராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரூபாய் 50 இலட்சம் என்று குறிப்பிட்டுச்சொன்னார்கள். ரூபாய் 50 இலட்சத்திற்கும் கூடுதலாகக் கூட இருக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்காக ஒரு தனிக் கேள்வி போடுவாரேயானால், அதற்குரிய விளக்கம் அளிக்கப்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 239, திரு. பி. ஆர். சுந்தரம், மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

239—

விலைப் பட்டியல்

***1846—திரு.பி.ஆர். சுந்தரம்:**

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறிய மற்றும் பெரிய விற்பனைக் கடைகளில் விலைப் பட்டியல்கள் வைக்கும் முறை கட்டாயப்படுத்தப்படுமா?

2002 ஏப்ரல் 26]

மாண்புமிகு திரு. ப. தனபால், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிறிய மற்றும் பெரிய விற்பனைக் கடைகளில் விலைப் பட்டியல்கள் வைக்கும் முறை கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறிய மற்றும் பெரிய விற்பனைக் கடைகளில் விலைப் பட்டியல்கள் வைப்பது கட்டாயம் ஆக்கப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கு தெரியப்படுத்தியிருக்கின்றார்கள். இருந்தாலும், பெரும்பாலும் சிறிய மற்றும் பெரிய கடைகளில் விலைவாசிப் பட்டியல்களை அவர்கள் வைப்பதில்லை. அவ்வாறு விலைவாசிப் பட்டியல்களை வைத்தாலும், ஒரு கடைக்கு ஒரு கடை வெவ்வேறு விதமாக விலையை இங்கே குறிப்பிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். மேலும் அத்தியாவசியமான பண்டங்களின் விலை அந்த விலைவாசிப் பட்டியலில் இடம்பெறுவதில்லை. கிராமப்புறங்களில் ஒருசில நேரங்களில் அறுவடையின்போது விலை குறைவாக இருக்கும். அறுவடை முடிந்ததற்குப் பிறகு விலை அதிகமாக இருக்கும். ஆனால், அறுவடையான காலத்தில்கூட, விலை மிகவும் குறைவாக இருக்கிற காலத்தில்கூட, நகர்ப்புறங்களில் எல்லாம் அந்த விலையை உயர்த்தி பழைய விலைக்கே அந்த விலைப் பட்டியல்களை எல்லாம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, சென்னையிலே சுபிக்சா, Food World போன்ற நிறுவனங்களில் எல்லாம் பன்மடங்கு விலையை அதிகமாக உயர்த்தி விலைப் பட்டியல்கள் எல்லாம் வைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரத்தில் அரசு தன்னுடைய விலையைக்கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. இந்த விலைப் பட்டியல்கள் சரியாக இல்லாத காரணத்தினால் மக்களிடம் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த முடியாத நிலை இருக்கிறது. எனவே இது குறித்து மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்பட வேண்டும். ஆக, அரசும் விலைவாசிப் பட்டியல்கள் வைப்பதனைக் கட்டுப்பாட்டிலே வைத்திருக்க வேண்டும் என்பதை மனதிலே வைத்து அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த விலைவாசிப் பட்டியல்கள் அனைத்துக் கடைகளிலும் வைக்க வேண்டும் என்பைதைக் கட்டாயமாக்கும்படி உடனடியாகப் பார்வையிட்டு தக்க நடவடிக்கை எடுத்து விரைவுபடுத்துவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. தனபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற குறைகளைக் களைவதற்காகத்தான் Tamil Nadu Essential Commodities Act (Display of the Stocks and Price and the Maintenance of the Accounts Order) 1977 என்ற சட்டத்தின்படி விலைப்பட்டியல்கள் கட்டாயமாகக் கடைகளிலே வைக்கப்பட வேண்டும் என்ற ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதிலே இந்த அரசு மிக அக்கறையோடு இருக்கிற காரணத்தினாலே, இந்த ஆட்சி அமைந்ததற்குப் பின்னாலே கடந்த 2001 மே மாதத்திலிருந்து 2002 மார்ச் மாதம் முடிய இதுவரை 4263 சோதனைகள் நடத்தப்பட்டு, அப்படி விலைப் பட்டியல்கள் வைக்காத 137 பேருக்கு show-cause notice கொடுத்து, இந்த அரசு விரைவான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 240, திரு. அ. பாப்பா சுந்தரம், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

240—

சாயப் பட்டறை

***7339—திரு. அ. பாப்பா சுந்தரம்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் நகராட்சிப் பகுதியில் அமராவதி ஆறு மற்றும் காவிரி ஆற்றுப் படுகையிலிருந்து 5 கி.மீ. தூரம் தள்ளி மட்டுமே சாயம் மற்றும் சலவைப் பட்டறை அமைக்க வேண்டும் என்ற அரசு விதியை 1 கி.மீ. ஆக மாற்றிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. மோகன், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அமராவதி ஆறு மற்றும் காவிரி ஆற்றுப் படுகையிலிருந்து 5 கி.மீ. தூரம் தள்ளி மட்டுமே சாயம் மற்றும் சலவைப் பட்டறை அமைக்க